# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8064891

1. District மாவட்டம்: சென்னை PS: காவல்நிலையம்: V & AC Year: ஆண்டு: 2019 FIR No.: மு.த.அ. எண்: 13 Date: நாள்: 23-10-19

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: Sec 7 of PC Act
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: (Amended) 2018
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 22.10.19 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 18.00 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.10.19 Time நேரம் : 21.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் : 21.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் V1, Villivakkam Police station, North-East 15 km (approx),
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. Prabakaran (b) Father's/ ~~Husband~~'s Name : தந்தை / கணவர் பெயர் S. Ganesan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 45 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Real Estate Business (g) Address : முகவரி No. 2, F2, Second street, Kongu Nagar, Mogappair, Chennai - 37.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Tamizhalagan, Inspector of Police, V1 crime PS

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— No delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Re Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனா ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complai Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 23.10.2019

Signature of the Officer-in-charge, Police S
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature]

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.10.19

Name: பெயர் ...V. Selvi...
Rank: நிலை .............. No. எண்
Inspector of P
City-V, Bet
Chennai-16.

..........Continuation to column no.12 of FIR in No.13/AC/2019/CC-II

22.10.2019ந் தேதி 21.30 மணியளவில் நான் அலுவலக பணியில் இருந்தபோது துணை கண்காணிப்பாளர், நகர பிரிவு 2 அவர்கள் G.பிரபாகரன், த/பெ.S.கணேசன், எண்.2, F-2-இரண்டாவது தெரு, கொங்கு நகர், முகபேர், சென்னை - 37. என்பவர் கொடுத்த புகார் மனுவை பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்க கொடுத்த உத்தரவின்பேரில் புகாரைப் பெற்று நடவடிக்கை எடுக்க நான் வாதியை பற்றியும் எதிரியை பற்றியும் தனி தனியாக ரகசிய விசாரணை மேற்கொண்டு, பிறகு இன்று 23.10.2019ந் தேதி காலை 08.15 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை, நகரபிரிவு-2 ன் குற்ற எண்.13/2019/ AC/CC-II- u/s 7 of Pc (Amendment) Act 2018 பிரகாரம் வழக்கு பதிவு செய்தேன். மேற்படி புகாரின் விவரம் பின்வருமாறு:-அனுப்புநர், நாள்:22.10.2019 G.பிரபாகரன், த/பெ.S.கணேசன், எண்.2, F-2 இரண்டாவது தெரு, கொங்கு நகர், முகபேர், சென்னை - 37. பெறுநர், உயர்திரு. காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சென்னை நகர பிரிவு-2, ஆலந்தூர், சென்னை–16. ஐயா, நான் முகபேர், கொங்கு நகர், சென்னை, எண்.2, F-2 இரண்டாவது தெரு என்ற விலாசத்தில் என் மனைவி குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். நான் DCA முடித்துவிட்டு 10 வருட காலமாக Real Estate தொழில் செய்து வருகிறேன். கடந்த 2012ல் என் நண்பர் மூலமாக தெரிந்த திருமதி.தீபா என்பவர் அவருக்கு சொந்தமான பட்டரவாக்கம் பாரத் நகரிலுள்ள 1200 சதுர அடி என்ற இடத்தை விற்று தரும்படி, அதன் ஆவணங்களை என்னிடம் கொடுத்தார். ஆவணத்தின்படி ரயில்வேயில் பேண்ட் மாஸ்டராக பணியில் இருந்த திரு.சுப்பிரமணி என்பவர் பெயரில் அந்த ஆவணம் 1992ல் பதியபட்டிருந்தது. விசாரித்ததில் அந்த இடம் 1966லியே அரசு கையக நிலமாக இருந்தது தெரிய வந்தது. அந்த நிலத்தை திருமதி.தீபா அவர்கள் விற்க முடியாத சூழ்நிலையில் தான் என்னிடத்தில் விற்று தரும்படி கேட்டு கொண்டனர். நான் அந்த நிலத்தை விற்பதற்காக அரசாங்க அலுவலான தாசில்தார் அலுவலகம் அனுகி அரசு விதிகளுக்குட்பட்டு, என்னுடைய வாடிக்கையாளரான திரு.மோகன் என்பவரை நில உரிமையாளர் திரு.சுப்பிரமணி அவர்களுக்கு அறிமுகம் செய்து, திரு.மோகன் அவர்கள் பெயரில் பொது அதிகாரம் வழங்கப்பட்டது. இதற்காக நான் ரூ.2,50,000/- வரையில் செலவழித்து இருந்ததால் நிலத்தின் விலையாக ரூ.14,50,000/- திரு.மோகனிடம் பெற்றுக்கொண்டு, திருமதி.தீபா அவர்களிடம் பேசி ஒப்பு கொண்டபடி அவருக்கு சேரவேண்டிய ரூ.12,00,000/- ஒரு வருட காலத்தில் திருப்பி தருவதாக ஒப்பு கொண்டேன். ஆனால் பொது அதிகாரம் வழங்கிய தேதியன்றே ரூ.85,000/- யும் அதே மாத இறுதியில் ரூ.50,000/- திரு.சுப்பிரமணி அவர்களிடம் கொடுத்தேன். அதன்பிறகு 2012ல் ரூ.1,00,000/- மும், 2013ல் ரூ.1,50,000/-யிரத்தை இரண்டு முறையும், ரூ.4,00,000/- ஒரு முறையும் கொடுத்தேன். அதன் பின்னர் 2014ல் ரூ.50,000/- ஒரு முறையும், இதன் இடைப்பட்ட காலத்தில் தவணைகளாக மொத்தம் ரூ.2,15,000/- வரை கொடுத்துள்ளேன்.

மொத்தம் சுமார் ரூ.12,00,000/- யும் கடந்த 2015 மார்ச் மாதம் கொடுத்து, அவரது கண க்கை முடித்து கொண்டேன்.

இந்த இடைப்பட்ட காலத்தில் திரு.சுப்பிரமணி அவர்கள் எந்தவொரு தொடர்பும் இல்லாமல் இருந்தவர். கடந்த 2017ல் பிப்ரவரி மாதத்திலிருந்து பல முறை என் வீட்டிற்கு வந்து, மேற்கூறிய மேற்சொன்ன நில விற்பனையின் அவருக்கு சேர வேண்டிய எந்தவொரு தொகையும் நான் தரவில்லை என்வும், என்னை மேற்கொண்டு பணம் தரும்படி மிரட்டி வந்தார். இதன் தொடர்பாக நான் கடந்த 2019ல் ஜீன் 20ம் தேதி, ஜெ-7 நொளம்பூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். ஆய்வாளர் திரு.சத்தியலிங்கம் என்னை விசாரித்தார். விசாரணையின்போது திரு.சுப்பிரமணி அவர்கள் ரூ.38,00,000/- தர வேண்டும் என்று தெரிவித்து இருந்தார். காவல் ஆய்வாளருக்கு திரு.சுப்பிரமணி மீது முழுமையான நம்பிக்கை இல்லாததாலும், எங்களை நீதிமன்றத்தை அனுகும்படி எங்களிடம் வாக்குமூலங்களை பெற்று கொண்டு எங்களை அனுப்பிவிட்டார். அதனையடுத்து திரு.சுப்பிரமணி அவர்கள் என் மீது ஒரு பொய்யான புகார் ஒன்றினை V-1 வில்லிவாக்கம் காவல் நிலையத்தில் ஆகஸ்டு 2019 வாக்கில் கொடுத்திருந்தார். அதில் நான் அவருக்கு நிலத்தை விற்ற வகையில் ரூ.28,00,000/- பாக்கியுள்ளதாக தெரிவித்திருந்தார். அதன் அடிப்படையில் காவல் ஆய்வாளர் திரு.தமிழழகன் என்னை விசாரித்து வந்தர்ர். நானும் முழு ஒத்துழைப்புடன் கூப்பிட்டபோதெல்லாம் காவல் நிலையம் சென்று என் தரப்பு நியாயத்தையும், உண்மைகளையும் தெரிவித்தேன். ஆனால் ஆய்வாளர் திரு.தமிழகன் என்னை, திரு.சுப்பிரமணி கேட்கும் பணத்தை கொடுக்கும்படி மிரட்டி வந்தார். கடந்த செப்டம்பர் மாதத்தில் வக்கீல் திரு.ராஜ்குமார் மூலமாக நோட்டீஸ் ஒன்றினை திரு.தமிழகன் அவர்களுக்கு அனுப்பியிருந்தேன். அதில் எனக்கும் திரு.சுப்பிரமணி அவர்களுக்கும் உள்ள பிரச்சனைக்கள் முழுவதும் சிவில் சம்மந்தப்பட்டது என்றும், இதில் காவல் நிலையத்தில் தீர்ப்பதற்கு எதுவுமில்லை என்பதால் என்னை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று தெரிவித்திருந்தேன். இதனையடுத்து, இன்று 22.10.2019 அதிகாலை சுமார் 04.30 மணிக்கு ஆய்வாளர் தமிழழகன் மற்றும் அவருடன் மூன்று காவலர்களும் நான் குடியிருக்கும் வீட்டிற்கு வந்து எதுவும் தெரிவிக்காமல் என்னை கைது செய்து, வில்லிவாக்கம் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்றுவிட்டார்கள்.

காவல் நிலையத்தில் திரு.தமிழழகன் அவர்கள் ரூ.18,00,000/ திரு.சுப்பிரமணி அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றும், பணம் இல்லையென்றால் என்னிடம் இருக்கும் ஏதாவது சொத்தையாவது எழுதி தர வேண்டும் என்றும் மிரட்டி வந்தார். நான் என்னால் அவ்வளவு பணம் தர முடியாது. திரு.சுப்பிரமணியத்திற்கு தர வேண்டிய எந்த பாக்கியும் கிடையாது என தெரிவித்தேன். ஆனால் ஆய்வாளர் அவர்கள் பணம் தராவிட்டால் என் மீது பொய் வழக்கு தொடர்ந்து ஜெயிலுக்கு அனுப்பிவிடுவேன் என்று மிரட்டினார். சுமார் 06.00 மணி வாக்கில் என் நண்பர் திரு.சுரேஷ் அவர்கள் என்னை தேடி வில்லிவாக்கம் காவல் நிலையத்திற்கு வந்திருந்தார். ஆய்வாளரிடம் அனுமதி பெற்று என்னிடம் பேசிய

பொழுது நான் நடந்தவற்றை தெரிவித்தேன். பிறகு, நாங்கள் இருவரும் ஆய்வாளரிடம் சென்று பேசியதில், ஆய்வாளர் அவர்கள் திரு.சுப்பிரமணி அவர்களுக்கு ரூ.2,00,000/- வருகிற நவம்பர் மாதத்திற்குள் கொடுத்துவிட வேண்டுமென்றும், தற்பொழுது என்னை வழக்கிலிருந்து விடுவிக்கவும், காவல் நிலையத்திலிருந்து அனுப்புவதற்கும் தனியாக ரூ.20,000/- இன்றே கொடுக்க வேண்டும் என்றும் மிரட்டினார். எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. என்னிடம் தற்போது எந்த பணமும் இல்லை என்று சொன்னேன். அதற்கு ஆய்வாளர் என்னை பணத்தை தயார் செய்து கொண்டு நாளை 23.10.2019 மீண்டும் விசாரணைக்கு ஆஜராக வேண்டும் என்று எழுதி வாங்கி கொண்டு அதில் நானும் என் நண்பர் திரு.சுரேஷும் கையெழுத்தியிட்டோம். அப்பொழுது பணத்தை தர வேண்டும் என்று சொன்னார். இரவு 02.00 மணி வரையில் என்னை காவல் நிலையத்தில் கைதி போல என்னை வைத்திருந்தனர். அதன்பிறகு என்னை காவல் நிலையத்திலிருந்து இரவு 03.00 மணிக்கு வெளியே வந்துவிட்டோம். திரு.சுப்பிரமணியத்திற்காக ஆய்வாளர் கேட்கும் ரூ.2,00,000/- கொடுக்க அவசியமில்லை என்பதாலும், ஆய்வாளர் திரு.தமிழழகன் கேட்கும் லஞ்ச பணம் ரூ.20,000/- கொடுக்க விருப்பமில்லை என்பதால் திரு.தமிழழகன் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) (G.Prabhakaran), 22.10.2019,

Sir/Madam, Received the complaint on 22/10/2019 at 21.30 hrs after verifying the veracity of the complaint and reputation of the accused, registered a case in V&AC, city –II Detachment, in Cr.No.13/AC/2019/CC-II u/s 7 of PC (Amendment) Act 2018 at 08.15 hrs. The Original FIR along with complaint was sent to the court of Hon'ble Special Judge, Special Court for PC Act, Chennai and copies were sent to the Officer's concerned.

(V.Selvi) 23/10/19
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Alandur, Chennai.